# திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,
# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## வணிகமாணிக் கற்கைநெறிக்கான அனுமதி - 2022 / 2023 (அணி - VIII)

மேற்படி வணிகமாணிக் கற்கைநெறிக்கு கல்வியாண்டு 2022/2023 மாணவர்களைத் தெரிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் மற்றும் ஆவணங்களின் பிரகாரம், **தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் விபரம்** இணைப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**பதிவு செய்யும் போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்**

- பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவம் (இணைப்பு – 1)
- புகைப்பட உறுதிப்படுத்தல் படிவம் (இணைப்பு – 11) (3.0 cm x 3.5 cm, White Background)
- மக்கள் வங்கியில் பணம் செலுத்தியமைக்கான உறுதிச்சீட்டு (மூலப்பிரதி)
- கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ் (மூலப்பிரதியும், புகைப்படப்பிரதியும்)
  - கா.பொ.த. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ்
  - கா.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ்
- பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (மூலப்பிரதியும், புகைப்படப்பிரதியும்)
- திருமணச்சான்றிதழ் (பெண்கள்) (மூலப்பிரதியும், புகைப்படப்பிரதியும்)
- தேசிய அடையாளஅட்டை (புகைப்படப்பிரதி)
- ஏனைய தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் (NVQ தகைமையின் பெறுபேற்று அட்டவணை)

**கற்கைநெறிக் கட்டணம் தொடர்பான விபரம்**

| வருடம் | கட்டணம் செலுத்தப்பட வேண்டிய காலம் | தவணைக் கட்டணம் |
|---|---|---|
| 1ம் அரையாண்டு | பதிவின் போது | ரூபா. 70,000.00 |
| 3ம் அரையாண்டு | மூன்றாம் அரையாண்டு ஆரம்பத்திற்கு முன்பு கட்டணம் செலுத்துதல் வேண்டும் | ரூபா. 50,000.00 |
| 4ம் அரையாண்டு | நான்காம் அரையாண்டு ஆரம்பத்திற்கு முன்பு கட்டணம் செலுத்துதல் வேண்டும் | ரூபா. 50,000.00 |
| 5ம் அரையாண்டு | ஐந்தாம் அரையாண்டு ஆரம்பத்திற்கு முன்பு கட்டணம் செலுத்துதல் வேண்டும் | ரூபா. 50,000.00 |
| **மொத்தக் கட்டணம்** | | ரூபா. 220,000.00 |

- 1ம் வருட கட்டணமாகிய ரூபா.70,000.00 இனை பதிவு செய்யும் போது செலுத்த வேண்டும்.
- ஏனைய கட்டணங்கள் யாவும் மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையின் பிரகாரம் ஒவ்வொரு அரையாண்டின் ஆரம்பத்திலும் முழுமையாக செலுத்தப்பட வேண்டும்.

பதிவினை மேற்கொள்வதற்காக, மேற்குறிப்பிட்ட ஆவணங்களுடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திற்கு **தங்களுக்கு ஒதுக்கப்பட்ட தினத்தில் (05.10.2024** மற்றும் **06.10.2024)** நேரில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். **தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் விபரம் மற்றும் பதிவினை மேற்கொள்ளும் திகதி** என்பன இணைப்பில் இணைக்கப்பட்டுள்ளன.

மேற்கூறப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறுதல், அல்லது போலியான ஆவணங்களை சமர்ப்பித்தல் மற்றும் குறித்த திகதியில் நேரில் சமுகமளிக்காதோரின் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும் என்பதுடன், எக்காரணம் கொண்டும் கொடுப்பனவுகள் எவையும் மீளளிக்கப்படமாட்டாது, என்பதனையும் தாங்கள் கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

**முக்கிய குறிப்பு :** மேற்படி கற்கைநெறிக்குரிய விரிவுரைகள் மற்றும் பரீட்சைகள் முழுவதும் **தமிழ்மொழிமூலம்** இடம்பெறும்.

உதவிப் பதிவாளர்,
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.

10.09.2024